# இயேசுவே உந்தன் வார்த்தையால்

இயேசுவே உந்தன் வார்த்தையால்
வாழ்வு வளம் பெறுமே
நாளுமே அந்தப் பாதையில்
கால்கள் நடந்திடுமே
தேவனே உந்தன் பார்வையால்
என் உள்ளம் மலர்ந்திடுமே
இயேசுவே என் தெய்வமே உன்
வார்த்தை ஒளிர்ந்திடுதே

**1**
தீமைகள் தகர்ந்தொழிந்திடும்
உன் வார்த்தை வலிமையிலே
பகைமையும் சுயநலன்களும்
இங்கு வீழ்ந்து ஒழிந்திடுமே ( 2 )
நீதியும் அன்பின் மேன்மையும்
பொங்கி நிறைந்திடுதே
இயேசுவே என் தெய்வமே
உன் வார்த்தை ஒளிர்ந்திடுதே

**2**
நன்மையில் இனி நிலைபெறும்
என் சொல்லும் செயல்களுமே
நம்பிடும் மக்கள் அனைவரும்
ஒன்றாகும் நிலை வருமே ( 2 )
மிஞ்சிடும் புது விந்தைகள்
உன்னைப் புகழ்ந்திடுதே
இயேசுவே என் தெய்வமே
உன் வார்த்தை ஒளிர்ந்திடுதே